# இளந்தேவன் கவிதைகளில் இயற்கை

***பு. தீர்த்தராமன்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம் - *636001*., தமிழ்நாடு , இந்தியா.

***ஆ. சிலுவைமுத்து***
ஆய்வு நெறியாளர்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை , தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தருமபுரி -*636809*, தமிழ்நாடு, இந்தியா.

**Nature in Ilandevan Poems**

P. Theertharaman
Department of Tamil, Periyar University Salem – 636011, Tami Nadu, India
Dr. A. Siluvaimuthu
Assistant Professor, Department of Tamil, Don Bosco College, Salem – 636809, Tamil Nadu, India

**ABSTRACT**
The poet gives shape to his thoughts and ideas. He adds flavour to words. He composes **poetry** with colourful imagination of his experience. The poet is connected with nature and creates poetry with the experience he sees and enjoys. He tries to establish the natural scene in the mental image of the poet who writes in this way. The poet Ilandevan is the most important person who deeply enjoyed the nature and realized the theory of nature and wrote poetry. His subjects are the moon, the sky, the stars, the wind, the coast, and the rivers.
**Keywords**: Interpretation of Nature, Nature and Literature, Nature and Poetry

**ஆய்வுச் சுருக்கம்**

கவிஞன் தன்னுடைய சிந்தனைக்கும்,எண்ணத்திற்கும் வடிவம் கொடுக்கிறான். சொற்களுக்கு சுவையூட்டுகிறான். தன் அனுபவத்தை வண்ணமயமான கற்பனைக் கொண்டு கவிதை இயற்றுகிறான். கவிஞன் இயற்கையோடு இணைந்தவன். தான் கண்டு இரசித்து அனுபவத்தை கொண்டு கவிதை படைக்கிறான். அவ்வாறு படைக்கும் கவிதை படிப்பவரின் மனதில் இயற்கை காட்சியை மன பிம்பத்தில் நிலைநிறுத்த முற்படுகின்றான். இயற்கையோடு இணைந்து ஆழ்ந்து இரசித்து இயற்கை கோட்பாட்டை உணர்ந்து கவிதை படடைத்தவரின் மிக முக்கியமானவர் கவிஞர் இளந்தேவன் ஆவார். இவரின் பாடுபொருள்கள் நிலா,வானம் , விண்மீன்,காற்று,கடற்கரை, நதிகள் என இயற்கையை வருணித்து வார்த்தை ஜாலமாகவும் கற்பனையின் வெளிப்பாடாகவும் கவிதை இயற்றியுள்ளார்.

**திறவு சொற்கள்**

இயற்கையின் பொருள் விளக்கம்,இயற்கையும் இலக்கியமும் , இயற்கையும் கவிதையும்

**முன்னுரை**

தொன்மை வாய்ந்த மொழி நம் தமிழ்மொழி· தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்கள் கவிதைகளில் இயற்கையின் வெளிப்பாடு, இயற்கை சித்தரிப்பு, இயற்கை கூறுகள் காணப்படுகிறது தமிழ் மொழியின் பழமையான சங்க இலக்கிய பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களில் இயற்கை காட்சிகள், இயற்கை வெளிப்பாடு கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது· மரபுக் கவிதை , புதுக்கவிதையில் இயற்கையின் சித்தரிப்பு , இயற்கை வெளிப்பாடு, இயற்கை உணர்வுகளை கவிஞர்கள் உணர்த்துவதை அறிய முடிகிறது· அந்த வரிசையில் கவிஞர் இளந்தேவன் கவிதைகளில் இயற்கை சித்தரிப்பு , இயற்கை வெளிப்பாடு , கவிதைகளில் பயன்படுத்தி வெளிப்படுத்தி உள்ளார்· கவிஞர் இளந்தேவன் அவரைப்பற்றி இக்கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது·

**இயற்கை பொருள் விளக்கம்*( Meaning of Nature)***

இயற்கை என்ற சொல் இயல்பு என்ற பொருளை உணர்த்துகிறது· சுபாவம், பழக்கம், நிலைமை, கொள்கை, இலக்கணம் செயற்கைக்கு எதிரானது என்று இயற்கை என்ற சொற்பொருள் கூறுவர்· இயற்கை என்ற சொல்லிற்கு “ இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை , கொள்கை” என்று பல பொருள்களை கூறுகிறது·

**(கழக அகராதி பக்கம் - *114)***

பஞ்சபூதங்களின் தொகுப்பு இயற்கையை உருவாக்குகிறது· நிலம், தீ, நீர் ,காற்று , ஆகாயம் ஆகிய ஐந்தும் கலந்த மயக்கம் உலகமாகும்·

“நிலம் தீ நீர் வழி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்”

**(இளம்பூரணர் பொருளதிகாரம் மரபியல் நூற்பா - *91)***

கவிதைகள் இயற்கையைப் போற்றுகின்றன· இன்றைய நவீன கவிதைகள் காலகட்டம்வரை இயற்கையைப் பாடாத கவிகள் இல்லை· நீங்கள் ஒருவரை வாழச் சொல்லித் தரவேண்டுமென்றால் முதலில் இயற்கையை நேசிக்கக் கற்றுத் தரவேண்டும்· அப்படி நீங்கள் அதை

வருணிக்கும் வார்த்தைகளில் கவித்துவம் விளையாடக் காண்பீர்கள்· எனவேதான் கவிதைகளை உலகமெங்கும் மொழி கண்டுபிடிப்பதற்கு முன்பே உதித்துவிட்டது என்கிறோம்· ஆதி மனிதன் அவனைச் சுற்றிய ஒலி வளைவுகளில் முதலில் இசையைக் கண்டடைந்திருப்பான்· அவனது சங்கேத மொழியே இயற்கையிலிருந்து, ஏனைய உயிர்க் கூட்டங்களின் ஒலியிலிருந்து, தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் உடல் மொழியிலிருந்து, விதவிதமான லயத்தைக் கொண்டு எழுந்திருக்கிறது· மனிதன் சிக்கி முக்கிக் கற்களை உரசும்போதே அதன் ஒலியில் அதன் பொறியில் அதைக் கண்ட வியப்பில் கவிதையையும் கண்டிருப்பான் என்று தோன்றுகிறது· கவிதை ஒரு கண நேரத்தில் நிகழும் புத்தெழுச்சி· உணர்வெழுச்சி· காணததைக் கண்டதும், இது கற்பனையா உண்மையா என்று சிந்திக்கும்போது ஒன்றின் மீது கொண்ட மனங்கவிதல் கவிதையாகிறது·

**இயற்கையும் இலக்கியமும்**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதை பெற்றிருக்கும் புதிய வடிவத்தை புதுக்கவிதை என்கிறோம்· வடிவம், உத்திகள் வேறுபட்டு நின்ற போதும் பாடுப்பொருள் பெரும்பாலும் மரபோடு இயைந்து அமைந்துள்ளது· அறிவியல் கூறுகளை எடுத்துரைக்கும் போது புதுக்கவிதை வேறுபடுகிறது· மற்ற இடங்களில் மரபின் தாக்கம் அழுத்தமாக நிலவுகிறது· கவிதை எப்போது தோன்றியது என்று வரையறுத்தால் அது கல்தோன்றி முன் தோன்ற காலத்தே என்று தமிழ் மொழிக்குச் செல்வதுபோல், உலகச் சமூகத்திற்கும் கவிதைக்கான தோற்றத்தை விளக்குவது சாலப் பொருந்தும்· ஆம்· கவிதை, ஆதிப் பொதுவுடமை காலத்திலிருந்தே, குகையில், காட்டு மரங்களின் நிழலில் மனிதன் வாழ்ந்திருந்த காலத்திலிருந்தே கவிதை தோன்றிவிட்டது· வேறு உயிர்களை விட மனிதன் கடலோடும் மலையோடும் வெகுவான உறவு கொண்டிருக்கிறான்· தொடர்ச்சியான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வழியே இன்றைக்கு நவீன உலகில் மனிதன் அடைந்திருக்கும் வளர்ச்சி மிகப்பெரியது· அதே வேளையில் இயற்கையை விட்டு பாரதூரமாக அன்னியமாகிவிட்ட நிலையில் பெரும் பேரழிவுகளின், அன்றாடம் வானிலைப் பிறழ்வுகளுடன், தொற்று நோய் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்· எல்லா

மனிதப் பிறழ்வுகளிலிருந்தும் மீண்டு வாழ்தலுக்கான கருவியாக எல்லாக் காலத்திலும் கவிதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன·

மனிதன் தோன்றிய காலம் முதல் இன்று வரை அவனோடு நெருங்கிய உறவுக் கொண்டிருப்பது இயற்கை ஆகும்· சங்க இலக்கியங்களில் இயற்கை காட்சிகள், இயற்கை சித்தரிப்பு, அதிகமாக காண முடிகிறது· மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான் என்பதற்கு 'சுனையில் நீராடல்' என்னும் செய்தி உண்மையாக்குகிறது

விசும்பு ஆடு பறவை வீழ்பதிப் படர
நிறை இரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு
அகல்இரு வானத்து வீசுவளி கலாவின்
முரசு அதிர்ந்தன்ன இன்மகுறல் ஏற்றொரு
நிரை செலல் நிவப்பின் கொண்மூ மயங்கி
இன் இசை முரசின்... ***(பத்துப்பாட்டு பகுதி- 2 பாடல் வரிகள் 61)***

என்னும் இப்பாடல் வரிகள் ஆகாயத்தில் பறக்கும் பறவைகள்· தாம் விரும்பும் கூடுகளில் தங்குவதற்குச் சென்றன· நீர் நிறைந்த கடலின் நீர் குறைப்படும்படி மேகங்கள் முகந்து கொண்டன, முரசு சிறிது முழங்கினாரற் போன்ற இனிய குரலையுடைய இடியேற்றத்துடன் அவை வரிசையாக மேலெழுந்து சென்றன, இனிய ஓசை உடைய முரசினையும், ஒளிபொருந்திய அணிகலன்களையும் உடைய முருகன் அசுரர்களைக் கொள்வதற்கு உயர்த்திய விளங்கும் இலைத் தொழிலையுடைய வேல் போல் அவை மின்னின· ஏனைய நான்கு பூதங்களும் தமிழ் சிரித்ததற்கும் காரணமாகிய கரிய ஆகாயத்தில் வீசுகின்ற காற்று அம்மேகங்களுடன் கூடுதலால் தொகுதியாகிய அவற்றின் கூட்டையும் களைத்து மழை பொழிந்தன· என இயற்கையோடு வாழ்வியல் பண்பாட்டு முறையை அமைத்து வெளிப்படுத்துகிறது·

கவிஞர் இளந்தேவன் தன்னுடைய கவிதை படைப்பில் **'புகாரில் ஒரு நாள்'** என்னும் தலைப்பில் புகார்நகரின் காலைக் காட்சி, கதிரவன் உதிக்கும் காட்சியை, இயற்கையோடு வருணித்துள்ளார்·

தங்கக் கடல்மேல் தளித்ததொரு வெள்ளிமலர்
வங்கக் கடல்மேலே வட்டக் கதிர்வந்தான்;
நீலக்கடலலைகள் நீட்டி முழக்கியிசை

ஞாலமப் பெருநகராம் நல்லபுகார் வாழ்த்துரைக்கும்
காலைப்பெண் சூல்கொள்ளக் காணும் இடம்தோறும்
ஞானத் துயர்த்துடிப்பு; நாற்றிசையும் இன்பமயம் *(***கனவு மலர்கள் ப** *– 14)*

தங்கக் கடலின் மேல் புறத்தில் வளர்ந்த வெள்ளிமலர் ஆகிய கதிரவன். வங்க கடலின் மேலே வட்டமான கதிரவன் வந்தான். நீலக் கடல் அலைகள் ஓசையின் சத்தத்தில் புகார்நகரை வாழ்த்துரைக்கும். காலைப்பொழுது சூழ்ந்து கொள்ள காணும் இடம்தோறும் நான்கு திசையையும் இன்பமயமாக புகார் நகரும் இருக்கும் என்று இயற்கையோடு வருணித்துள்ளார் கவிஞர் இளந்தேவன்.

**இயற்கையும் கவிதையும்**

அமெரிக்கக் கவிஞர் எமிலி டிக்கின்சன் *1863* ஆம் ஆண்டில் "இயற்கை நாம் பார்ப்பது" என்று எழுதினார். இந்த கவிதை இயற்கை உலகின் அழகையும் அதிசயத்தையும் புகழ்கிறது, அதே நேரத்தில் மனிதர்களுக்கு அந்த உலகத்தை முழுமையாக புரிந்து கொள்ளவும், வகைப்படுத்தவும் மற்றும் விவரிக்கும் திறன் இல்லை என்றும் வாதிடுகிறார். "இயற்கை" என்பது மலைகள் மற்றும் பறவைகள் போன்ற மனிதர்களால் பார்க்கக்கூடிய மற்றும் கேட்கக்கூடிய விஷயங்களை உள்ளடக்கியது, ஆனால் பேச்சாளர் இது "சொர்க்கம்" மற்றும் "இணக்கம்" போன்ற சுருக்கமான கருத்துக்களை உள்ளடக்கியது என்று வலியுறுத்துகிறார். இந்தக் கவிதையானது பல டிக்கின்சன் "வரையறை" கவிதைகளில் ஒன்றாகும், இதில் பேச்சாளர் ஒரு குறிப்பிட்ட கருத்தை வரையறுக்க முயற்சிக்கிறார்-இருப்பினும், இந்த விஷயத்தில், பேச்சாளர் தோல்வியை ஒப்புக்கொள்கிறார்.இயற்கையும் கவிதையும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இயற்கையின் காட்சிகள் மூலம் கவிதை தோன்றும். காணும் இடமெல்லாம் கற்பனையிலன் காட்சிகள் மூலம் கவிதை தோன்றும். அத்தகைய இயற்கைக் காட்சிகள் மூலம் தன்னை இணைத்துக்கொண்டு கவிதை படைத்தவர் கவிஞர் இளந்தேவன் ஆவார். இவரின் படைப்புகளில் பாடுபொருள்களாக நிலா , கதிரவன் , வானம், பால்வெளி, வானவில் , விண்மீன் , காற்று, நதி என இயற்கையை வருணித்து வார்த்தை ஜாலமாக கவிதை படைத்துள்ளார் இளந்தேவன்.

**விண்மீன்**

கவிஞர் இளந்தேவன் விண்மீன்குறித்த இயற்கை சித்தரிப்பு நீலப்பொடியை கரைத்த வானில் , தன் நினைவுகளைத் கரைத்த வானில் , கோலப் பொடியில் வைத்த புள்ளிகள் போல விண்மீன் ஒருகோடி இருக்கும் என வருணிக்கிறார்·

நீலப் பொடிகரைத்த வானில் - என்
நினைவைக் கரைத்துவிட்ட வானில்
கோலப்பொடியையில்வைத்த புள்ளி - ஒரு
கோடியிருக்குமடி தோழி*!* ***(*கனவு மலர்கள் ப *- 20)***

**வானவில்**

ககனம் அழுகையிலே,
கதிரங்கு சிரிக்கையிலே,
ஏழுநிற வில்லெடுத்தாய்
எவரோடு போராட ***(*கனவு மலர்கள் பக்கம்*-53)***

வானம் அழுகிறது கதிரவன் சிரிக்கின்றான்· அப்போது வானவில் தோன்றுகிறது அந்த வானவில் உடைய ஏழு நிறங்களை வில்லோடு ஒப்பிட்டு எவரோடு போராடுகிறார் என்று இயற்கையை இணைத்து வருணித்துள்ளார் இளந்தேவன் அவர்கள்·

**நிலா**

நீலவான் முக்கா டிட்ட
நிலவுப்பெண் அமுதப் பார்வை
பாலினைச் சொரியும் *;* இந்தப்
பாருக்கு விளக்காய் தோன்றும் *!*
நீலவான் மீன்கள் இந்த
நிலத்துக்குப் பொதுமைச் சொத்தே ***(*கனவு மலர்கள் ப *- 90)***

நீலமான வானத்தை முக்காடு இட்டுக்கொண்டு நிலவு பெண்ணானவள் அமுதப் பார்வையாள், பாலினைப் சொரியும் அதுப்போன்று இந்த உலகத்திற்கு விளக்காய் தோன்றுகிறாள் இந்த நீலவான் மீன்கள் நிலவானது இந்த உலகத்திற்கே பொதுவான சொத்து என்று கூறுகிறார்·

இயற்கையைப் போற்றுவதும், இயற்கை இரசிப்பு, இயற்கை சித்தரிப்பு , இயற்கை வருணிப்பு ஆகியவற்றில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் பாரதிதாசன் அவர்கள் தன் கவிதை படைப்பில் நிலவைப் பற்றி

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலா என்று காட்டுகின்றாய்
ஒளிமுகத்தை*!*
கோல முழுவதும் காட்டிவிட்டால் காதல் கொள்ளையிலே இவ்வுலகம்
சாமோ *?*
வானச்
சோலையிலே பூத்த தனிப்பூவோ நீ
தான்
சொக்க வெள்ளிப் பால்குடமோ, அமுத
ஊற்றோ
காலை வந்த செம்பருத்தி கடலில்
மூழ்கிக்
கனல் மாறிக்குளிர்அடைந்த
ஒளிப்பிழம்போ *?* **(பாரதிதாசன் கவிதைகள்**
**புரட்சிக்கவி பக்கம் *- 20)***

நிலவானது நீளமான ஆடையை உடுத்திக் கொண்டு தன்னுடைய உடல் முழுவதும் மறைத்துக் கொண்டு காட்சியளிக்கிறது உடல் முழுவதும் காட்டிவிட்டால் காதல் கொள்ளையிலே இந்த உலகம் சாபமோ என்றும் வானச் சோலையில் பூத்த தனி பூ என்றும் விளக்குகிறார் வெள்ளிப் பால்குடம் என்றும், காலையில் உதித்த கதிரவன் கடலில் மூழ்கி வெப்பத்தை தணிந்து குளிர்ச்சி அடைந்து வந்த ஒளிப்பிழம்பானது நிலவு என்று பாரதிதாசன் இயற்கையாக வருணித்துள்ளார்·

**நிலா**
பூமியின் திருமகள்
சூரியக் கிழவனின்
சொந்தப் பேத்தி *!* **(தேவமொழிகள்**
**ப *- 51)***

இளந்தேவன் அவரின் நிலவைப் பற்றி அவரின் இயற்கையின் வெளிப்பாடு நிலவானது புவியின் திருமகள் என்னும் கதிரவனின்

சொந்த பேத்தி என்று கற்பனை வரிகளை வார்த்தை ஜாலமாக கூறுகிறார்·

**நட்சத்திரங்கள்**

கீழே தானே கடல்
மேலே மீன்கள் என்ன செய்கின்றன ?

**(தேவமொழிகள் ப - 51)**

கீழேதான் கடல் இருக்கின்றது மேலே மீன்கள் என்ன செய்கின்றன என நட்சத்திரம் குறித்து விவரிக்கிறார் கவிஞர் இளந்தேவன்·

**கடற்கரை**

இதயங்கள் அதிகம்
தொலைந்து போகுமிடம்·

**(தேவமொழிகள் ப - 52)**

காதலர் அதிமாக கூடும் இடங்கள் கடற்கரை அங்குதான் இயற்கையை இரசிப்பார்கள், தன் காதலிப் பற்றி கவிதையாக உரையாடுவார்கள்· அந்த இடத்தில் இதயங்கள் அதிகம் தொலைந்து போகும் இடம் என்று கற்பனை வரிகளில் இளந்தேவன்·

**கடல்**

கதிரவன் முகம் பார்க்க
எவ்வளவுப் பெரியக் கண்ணாடி

**(தேவமொழிகள் ப - 57)**

கதிரவன் தன் முகத்தை பார்ப்பதற்கு கடலை கண்ணாடியாக வருணித்துள்ளார்

**இசை**

காற்றிலில் செதுக்கிய சிற்பம்

**(தேவமொழிகள் ப - 55)**

இசை சார்ந்து இளந்தேவன் அவரின் கற்பனை வரிகள் இசையானது காற்றில் செதுக்கிய சிற்பம் என வருணிக்கிறார்·

**பூமி**

அண்டவெளிக் குப்பையிலே
அகழ்ந்தெடுத்த குன்றிமணி
பாதிக் கருப்பு ! மீதி சிவப்பு !

**(தேவமொழிகள் ப - 57)**

பூமியைப் பற்றி இளந்தேவன் பூமியானது அண்டவெளி குப்பையிலே அகழ்ந்து எடுக்கப்பட்ட குன்றிமணி பாதிக்கருப்பு,

மீதிசிவப்பு என இயற்கையின் ஈடுபாடு இந்த படைப்புகள் மூலம் அறிய முடிகிறது·

**முடிவுரை**

இளந்தேவன் அவரின் கவிதைகள் அதிகமா இயற்கையைப் போற்றுதல் , இயற்கையின் மீது அதிக ஈடுபாடு, இயற்கைக் காட்சிகளை வருணித்தல், இயற்கைச் சித்தரிப்பு, இயற்கை வெளிப்பாடு, இயற்கையோடு ஒன்றுதல், கற்பனை வரிகள், என அவரது படைப்புகள் உள்ளது· கற்பனைகள், இயற்கைக் காட்சிகள் படிப்பவரின் மனதில் முன் நிறுத்துகின்றன இளங்கோவடிகள் , பாரதியார் பாரதிதாசன், வாணிதாசன் ஆகிய கவிஞர்கள் போல் இயற்கை நேசிப்பு இளந்தேவன் அவரிடம் உள்ளது எனக் கட்டுரையானது அமைந்துள்ளது·

**பார்வை நூல்கள்**

1· கழகப் புலவர் குழு, (2004), கழகத் தமிழ் அகராதி, கழக வெளியீடு, திருநெல்வேலி,

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி·டி·கே· சாலை,
சென்னை - 600018·

2· இளந்தேவன் (2003), இளந்தேவன் கவிதைகள், கண்ணப்பன் அறக்கட்டளை
23, வெள்ளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600024, முதல்பதிப்பு - 2003·

3· பாரதிதாசன் (2012) பாரதிதாசன் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், 127, (ப·எண்· 63)
பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை -600108

4· ம· நாராயண வேலுப்பிள்ளை, (1998), பத்துப்பாட்டு பகுதி 2, பாரி நிலையம்
59, பிராட்வே , சென்னை -1, முதல் பதிப்பு- 1998

5· இளம்பூரணர் (1971) தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600018·

6· இளந்தேவன் (1997), தேவமொழிகள், வெண்ணிலவு பதிப்பகம், I /28 பகுதி III,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு, தாம்பரம் சானடோரியம், சென்னை – 600047, முதல் பதிப்பு மே -1997`

## REFERENCES BOOKS

1. Kalazh Pulavar kulu. (2004), Kalazha Agarathi, Kalazha Veliyeedu Trinelveli,
1. Saiva Siddhantha Noorpathippu Kalazham Ltd 154, T T.K Salai Chennai – 600018.
2. Ilandevan, (2003), Ilandevan Kavithaigal, Kannappan Arakkattalai 23, Vellalar St,
3. Kodambakkam, Chennai – 600024, First Edition 2003.
2. Bharathidasan, (2012), Bharathidasan Kavithaigal, Poompukar Pathippagam
4. 127, (O.No. 63) Prakashm Salai, Bratway Chennai – 600108, First Edition-2012.
3. M. Narayana Velupillai, Pathuppattu Paguthi 2, Pari Nilayam, 59, Bratway
5. Chennai - 1, First Edition – 1998.
4. ILampuranar, (1971) Tolkappiyam Porulathikaram, Kazhaga Veliyedu, Saiva Siddhantha
6. Noorpathippu Kalazham, Chennai – 600018, First Edition - 1971
5. Ilandevan, (1997), Devamozhakal, Vennilavu Pathipakam, I / 28, Phase III
7. TNHB, Tambaram Sanatorium, Chennai – 600047, First Edition May – 1997